

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி சூரியம்பாளையம் பகுதியில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி கூறி வீடு, வீடாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்குச் சேகரிப்பில் முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், ஒன்றிய கழக செயலாளர் சென்னிமலை பி.செங்கோட்டையன், ஊத்துக்குளி மத்திய ஒன்றிய கழக செயலாளர் வி.ராஜா, மேயர் நாகரத்தினம், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர் எஸ்.குமாரவடிவேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.



பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற தமிழர் திருநாள் சமத்துவப் பொங்கல் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மகளிருக்கு, மேனாள் ஒன்றிய அமைச்சர் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா.எம்.பி., பரிசுகள் வழங்கினார். இதில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கே.என்.அருண்நேரு எம்.பி., மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளனர் .



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சமத்துவப் பொங்கல் விழாவிற்கு சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் வருகைதந்த சுற்றுலாப் பயணிகளை மாலை அணிவித்து வரவேற்றார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) லலித்ஆதித்ய நீலம், உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

### குன்னம் வளர்ச்சி மையம் சார்பில் – செந்துறை ஒன்றியம்

# பொன்பரப்பியில் தமிழர் திருநாள் மாபெரும் கபாடி போட்டி!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஜன, 21-

அரியலூர் மாவட்டம் பொன்பரப்பி குடிக்காடு கிராமத்தில் குன்னம் வளர்ச்சி மையம் சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள், பொங்கல் மற்றும் தமிழர் திருநாளை முன்னிட்டு

“அரியலூர் மாவட்ட அளவிலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாபெரும் கபாடி போட்டி நடைபெற்றது. நடைபெற்ற கபாடி திருவிழாவில்” இறுதிப் போட்டியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து போட்டியை பார்வையிட்டு வெற்றி பெற்ற அணிகளை பாராட்டி ரொக்கப் பரிசுகள் மற்றும் சுழற்கோப்பைகளை வழங்கினார்.

அரியலூர் மாவட்ட அளவிலான கபாடி போட்டி கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது. நடைபெற்ற ஆண்கள் அணிகளுக்கான இறுதிப் போட்டி மிகவும் பரபரப்பாக நடைபெற்றது. பிலாக்குறிச்சி அணி 26க்கு 17 என்ற புள்ளி கணக்கில் வெண்ணங்குழி அணியை வென்று பிலாக்குறிச்சி அணி முதலிடத்தையும் வெண்ணங்குழி அணி இரண்டாம் இடத்தையும் அரியலூர் அணி

மூன்றாம் இடத்தையும் இடையக்குறிச்சி அணி நான்காம் இடத்தையும் பெற்றன.

இரண்டு நாட்களாக நடைபெற்ற போட்டியில் ஆண்கள் பிரிவில் 28 அணிகளும், பெண்கள் பிரிவில் 9 அணிகளும் பங்குபெற்றன. ஆண்கள் அணியில் முதல்பரிசு 25,000, இரண்டாவது பரிசு 20,000, மூன்றாவது பரிசு 15,000 நான்காவது பரிசு 10,000.

பெண்கள் பிரிவில் முதல் பரிசு 20,000, இரண்டாவது பரிசு 15,000, மூன்றாவது பரிசு 10,000, நான்காவது பரிசு 5000 என வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், ஆர். கலியபெருமாள், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள்

எல்.கே.அருண் ராஜா மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மாரிமுத்து, வேல்முருகன், செந்தில், கதிரவன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பேராசிரியர் அருள், ஒன்றிய கழக நிர்வாகிகள் சபாபதி, கோடி, நன்னன், பாண்டியன், காளமேகம், ரமேஷ், பொன்செல்வம், சித்ரா, மாரிமுத்து, ஆசைத்தம்பி, துரை ரவி, சத்தியபாமா, புலவேந்திரன், கடலரசு, சத்தி, ரமணி, ராஜவேல், சுந்தர், மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக தோழர்கள், கழக நிர்வாகி கள் ஊர்பொதுமக்கள், விளையாட்டு வீரர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## வி.பி.கலைராஜன், புலவர் தஞ்சை கூத்தரசன், உடுமலை தண்டபாணி பங்கேற்பு!

திருவள்ளூர் ஜன 21-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் திருவள்ளூர் ரயில் நிலைய அருகில் வருகின்ற 25.01.2025 சனிக்கிழமை அன்று மாலை 6 மணி அளவில் நடைபெறுகிறது இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கிகிறார் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் நகரக் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஏ.முரளி சேனா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எம்.லிங்கேஷ்குமார், கு.பிரபா கரன், கோபி நாத், மு.எழிலரசன், அர்ச்சனா சாந்தகுமார் ஆகியோர் துவக்க உரையாற்றிகிறார்கள்.

இக்கூட்டத்தில் கழக இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் வீர வணக்க வீச்சு உரையாற்றுகிறார். இதில் இலக்கிய அணி புலவர் தஞ்சை கூத்தரசன், தலைமைக் கழக பேச்சாளர் உடுமலை தண்டபாணி உள்ளிட்ட பலர் கலந்து கொள்கிறார்கள்.


